








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஏப்ரல் - 2019

We Are Here..!! To Guide You..!!










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 10.04.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்



- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்








# இந்திய நிகழ்வுகள்

- உத்திரப் பிரதேச மாநிலத்தின், லக்னோவில் உள்ள **சஞ்சய் காந்தி மருத்துவ அறிவியல் நிறுவனத்தில்**, **தேசிய கார்டியோலஜி மாநாடு – 2019** குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையாநாயுடு தொடங்கி வைத்துள்ளார்.
    - இம்மாநாடானது **உத்திரப் பிரதேசத்தில் முதன் முறையாக நடைபெறுகிறது**.

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள தேசிய அளவில் **சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில், இந்திய தொழில்நுட்பக் கழகம் - சென்னை**(IIT - Madras) **முதலிடம்** பிடித்துள்ளது. **இந்திய அறிவியல் கழகம் - பெங்களூர்**(IISC - Bangalore) **இரண்டாமிடம்** பிடித்துள்ளது.
    - மேலாண்மை கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலில் இந்திய மேலாண்மை நிறுவனம் - பெங்களூர் (IIM-Bangalore) முதலிடம் பிடித்துள்ளது.
    - பல்கலைக்கழகம் தரவரிசைப் பட்டியலில் இந்திய அறிவியல் கழகம் - பெங்களூர் முதலிடம் பிடித்துள்ளது.

- நாகலாந்தில் உள்ள **கேண்யாக் இனத்தைச்** சேர்ந்த **5000 பெண்கள்** தங்களின் பாரம்பரிய நடனமாடி **"ஆவோலிங் மன்யூ"** (Aoleang Monyu Festival) **திருவிழாவில் உலக சாதனை** படைத்துள்ளனர்.
    - இவ்விழாவானது ஏப்ரல் 1 முதல் 3 வரை நாகலாந்தில் கொண்டாடப்படுகிறது.

# உலக நிகழ்வுகள்

- சீனாவின் க்யூங்டோவில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் **70வது நினைவு தினத்தை** அனுசரிக்கும் விழாவில் இந்தியாவின் **INS - கொல்கத்தா மற்றும் INS – சக்தி ஆகிய இரண்டு கடற்படை கப்பல்கள் பங்குபெற** உள்ளன.

# விளையாட்டு நிகழ்வுகள்

We Shine Academy TM

- மெக்சிகோவின் மான்டெர்ரி நகரில் நடைபெற்ற, **மான் டெர்சி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி – 2019**ல் பெண்கள் ஒற்றையர் பிரிவில் **ஸ்பெயினின் கார்பின் முகுருஜா** பெலாரஸ் நாட்டின் விக்டோரியா அஸரென்கா-வை வீழ்த்தி **சாம்பியன்** பட்டம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- நாசாவின் விண்வெளி தொலைநோக்கியான டெஸ்-இன் தரவுகளைப் பயன்படுத்தி **5 மில்லியன் ஆண்டுகள் பழமையான** மற்றும் **பூமியை விட 60 மடங்கு பெரிய** அளவுடைய **புதிய கோளை** அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
  - TOI – 1970 என்று இந்த கோள் அறியப்படுகிறது. அறிவியலாளர்கள் இதை "சூடான சனி" (Hot Saturn) என்று அழைக்கின்றனர்.

## பொருளாதார நிகழ்வுகள்

- **இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி**(GDP) 2019-2020 நிதியாண்டில் 7.**5 சதவீதமாக உயரும்** என உலகவங்கி கணித்துள்ளது.
  - மேலும் வேளாண்துறை வளர்ச்சியானது 4 சதவீத அளவிற்கு அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **கோஹிமாப் போர் நினைவு தினம் - ஏப்ரல், 4 1944**
  - இந்தியா கோஹிமாப் போரின் 75வது நினைவு தினத்தை ஏப்ரல் 4 அன்று கடைப்பிடித்தது. இரண்டாம் உலகப் போரின் போது 1944ம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆப்ரேசன் - 'சி' யின் திருப்பு முனையாக கோஹிமாவில் நடைபெற்ற இந்தப் போரானது கிழக்கின் ஸ்டாலின் கிரேடு என்றழைக்கப்படுகிறது.